# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 2303/02 - 2022 ඔක්තෝබර් මස 25 වැනි අඟහරුවාදා - 2022.10.25**

2303/02 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 25 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/9/2018/WS/236.
பிரதேச செயலாளரின் குறிப்பு இல.: DS/VS/ACQ/WT/J-199/01.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

| | |
|---|---|
| ஆரம்ப வரைபட இல. | : பிபியா 3006 |
| கிராமம் | : சுன்னாகம் |
| கிராம அலுவலர் பிரிவு | : J/199 சுன்னாகம் நகர் மேற்கு |
| பிரதேச செயலாளர் பிரிவு | : வலிகாமம் தெற்கு, உடுவில் |
| மாவட்டம் | : யாழ்ப்பாணம் |
| மாகாணம் | : வடமாகாணம் |
| நோக்கம் | : யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர்வழங்கல் மற்றும் துப்புர வேற்பாட்டுத்திட்டத்தின் கீழ் சுன்னாகம் நீர்த்தாங்கி அமைத்தல். |

**01. துண்டு இல. 01**

காணியின் பெயர்: சோனாவத்தக்கலட்டியும் சோனாவத்தையும் மற்றும் தேவிரானை; விபரம்: தோட்டம்; உரிமை கோருவோர்: முருகேசு சுந்தரராஜன் மற்றும் மனைவி லிங்கேஸ்வரி; விஸ்தீரணம்: 0.0689 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023.02.22 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு வலிகாமம் தெற்கு, உடுவில் பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்ததற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2023.01.23 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ரீ. முகுந்தன்,
பிரதேச செயலாளர்,
வலிகாமம் தெற்கு, உடுவில்.

பிரதேச செயலகம்,
வலிகாமம் தெற்கு, உடுவில்,
2022, ஒற்றோபர் 14.

EOG 10 - 0179